தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# எட்டாம் வகுப்பு
# தமிழ் அறிவுப்போட்டி 2019

## Year 8
## Tamil Language Skills Competition 2019

# தமிழறிவுப் போட்டி – 2019

## ஆண்டு - 8

**ஆரம்பப்போட்டி - 30 கேள்விகள்**

**முதல் சுற்று - 10 கேள்விகள்**

ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் தரப்பட வேண்டிய வினாக்களுக்கு, அனைத்து விடைகளும் வழங்கினால் மட்டுமே சரியான விடையாகக் கருதப்படும்.

எல்லா விடைகளையும் தரத்தவறினால் பிழையான விடை எனக் கருதப்பட்டு 5 புள்ளிகள் கழிக்கப்படும்.

**முதல் சுற்று 10 கேள்விகள்**

ஆசிரியரால் வாசிக்கப்படும்

1.

முத்தமிழ் எனப்படுவது யாது?

1. விடை:

இயல், இசை, நாடகம்

(இயற்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்)

2.

50வது ஆண்டு நிறைவில்

கொண்டாடப்படும் விழா எது?

2 விடை:

பொன்விழா

3.

தமிழில் உள்ள உயிர் எழுத்துக்கள் எத்தனை?

Year 8 - 2019

3. விடை:

12

(பன்னிரெண்டு)

4.

தமிழில் உள்ள உயிர்மெய் எழுத்துக்கள் எத்தனை?

4. விடை:

216

(இருநூற்றிப் பதினாறு)

5.

இவ் வாக்கியத்தில் உள்ள எழுவாய், பயனிலை, செயற்படுபொருள் கூறுக:

திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்

| எழுவாய் | பயனிலை | செயற்படுபொருள் |
| --- | --- | --- |
| | | |

மூன்று விடைகளையும் சரியாகக் கூறாவிட்டால் 5 புள்ளிகள் கழிக்கப்படும்

5. விடை:

| எழுவாய் | பயனிலை | செயற்படுபொருள் |
|---|---|---|
| திருவள்ளுவர் | இயற்றினார் | திருக்குறளை |

6.

ஐம்பெருங் காப்பியங்களும் எவை?

6. விடை:

சிலப்பதிகாரம்

மணிமேகலை

குண்டலகேசி

வளையாபதி

சீவகசிந்தாமணி

7.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்பவை ஔவையார் இயற்றிய இரு நூல்களாகும்.

அவர் இயற்றிய வேறு இரு நூல்கள் எவை?

7. விடை:

மூதுரை, நல்வழி

8.

**சிலம்பு** எந்த உறுப்புக்குரிய அணிகலன்?

8. விடை:

கால்

9.

இத் திருக்குறளை நிறைவு செய்க:

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**

__________________ __________________ __________________

9. விடை:

பகவன் முதற்கே உலகு

10. பின்வரும் வாக்கியத்தை நிறைவு செய்க

**விளையும் பயிரை ________ ________**

10. விடை:

முளையில் தெரியும்

முதற் சுற்று முடிவடைந்தது

இரண்டாம் சுற்று - 10 கேள்விகள்

11.

தமிழ் எழுத்துக்களில் இனம் மூன்று வகைப்படும்.

அதில் ஒன்று வல்லினம் மற்றய இரண்டையும் கூறுக:

11. விடை:

மெல்லினம்,
இடையினம்

12.

பெயர்ச் சொற்கள் ஆறு வகைப்படும்.

அதில் மூன்று:

பொருட் பெயர்

இடப் பெயர்

காலப் பெயர்

மற்றைய மூன்றைக் கூறுக:

12 விடை:

சினைப் பெயர்
குணப் பெயர்
தொழிற் பெயர்

13.

ஐவகை நிலங்களும் எவை?

13 விடை:

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

14.

__________ ஓசை நீண்ட தூரத்திற்கு கேட்டது.

1. ஆலயமனி
2. ஆலயமணி
3. ஆளயமணி
4. ஆழயமணி

14 விடை:

2. ஆலயமணி

15.

**“இளமையில் கல்வி சிலையில் எழுத்து.”**

என்ற பழமொழி வலியுறுத்தும் உண்மை யாது?

1. இளம் வயதில் கற்களில் எழுத வேண்டும்
2. சிறிய வயதில் நன்றாக எழுத வேண்டும்
3. இளம் வயதில் கற்கின்ற கல்வி, கற்களில் வெட்டப்பட்ட எழுத்துப்போல எப்போதும் நிலைத்து நிற்கும்

15 விடை:

3. இளம் வயதில் கற்கின்ற கல்வி, கற்களில் வெட்டப்பட்ட எழுத்துப்போல எப்போதும் நிலைத்து நிற்கும்

16.

“வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி வாழிய வாழியவே”

இதன் அடுத்த அடி என்ன?

16 விடை:

வான மளந்த தனைத்தும் அளந்திடும்

வண்மொழி வாழியவே

17.

சங்ககாலத்தில் தமிழை வளர்க்க மன்னர்கள் என்ன செய்தார்கள்?

Year 8 - 2019

17. விடை:

தமிழ்ச்சங்கம் அமைத்தார்கள்

18.

மலையும் மலை சார்ந்த இடமும் எப்படி அழைக்கப்படுகின்றது?

18 விடை:

குறிஞ்சி

19.

கம்பராமாயணத்தின் கதாநாயகன் யார்?

1. இலக்குமணன்
2. இராவணன்
3. இராமன்

19 விடை:

இராமன்

20.

பாட்டுக்கொரு புலவன் என அழைக்கப்படுபவர் யார்?

20 விடை:

பாரதியார்

இரண்டாம் சுற்று முடிவடைந்தது

மூன்றாம் சுற்று - 10 கேள்விகள்

# அட்டவணைக் கேள்விகள்

## ஆசிரியர் கேள்விகளை வாசிக்கலாம்

அட்டவணை கேள்விகள் - சொல்லாக்கம்

விடைகள் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து
கீழாகவும் இருக்கும்.

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

## உதாரணக் கேள்வி:

**யானையை இப்படியும் அழைக்கலாம்.**

(அட்டவணை காண்பிக்கப்படும் போது யாராவது விசையை (BUZZER) அழுத்தினால் உடனடியாக அட்டவணை மறைக்கப்படும்)

உதாரணக் கேள்வி

யானையை இப்படியும் அழைக்கலாம்.

விடை **A-1 கரி**

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | க | பு | ல் | லை | சா |
| 2 | ரி | ஓ | வி | ய | ர் |
| 3 | ப | னி | த் | து | ளி |
| 4 | வி | ல் | கு | ரு | ளை |
| 5 | ல் | ந | ட் | ட | ம் |

# 21.

புலிக்கொடியைச் சின்னமாகக் கொண்ட பழந்தமிழ் மன்னர்கள் யார்?

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | க | உ | ல் | லை | சா |
| 2 | ரி | று | சோ | த் | தை |
| 3 | ப | மு | ழ | து | ளி |
| 4 | வி | ம் | ர் | ரு | ளை |
| 5 | வ | ளை | யா | ப | தி |

21. விடை:

C2 சோழர்

# 22.

உழவர் திருநாள் கொண்டாடப்படும் மாதம் எது?

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | க | உ | ல் | லை | சா |
| 2 | ரி | று | அ | த் | தை |
| 3 | ப | மு | த் | து | ளி |
| 4 | வி | ம் | கு | ரு | ளை |
| 5 | வ | ளை | யா | ப | தி |

22. விடை:

E2 தை

# 23.

திருடி என்பதன் ஆண்பால் என்ன?

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | க | உ | ல் | லை | சா |
| 2 | ரி | று | அ | த் | தை |
| 3 | ப | தி | ரு | ட | ன் |
| 4 | வி | ம் | கு | ரு | ளை |
| 5 | வ | ளை | யா | ப | தி |

23. விடை:

B3 திருடன்

24.

குழம்பியிருக்கும் இந்தச்சொல் என்ன?

| | | | |
|---|---|---|---|
| தி | கை | ஒ | த் |

24. விடை:

ஒத்திகை

25.

“சித்திரைப் பௌர்ணமி தினம் வந்தது
முத்திரை பதித்தது போல் முழுநிலவு தோன்றியது”

வானத்தில் முழுநிலவு தோன்றும் நாள் எது?

25. விடை:

பௌர்ணமி (பூரணை)

26.

சொற்களுக்குரிய ஒத்த பொருட் சொற்களையோ, விளக்கங்களையோ பார்ப்பதற்கு உபயோகிக்கும் நூல் எது?

26. விடை:

அகராதி

# 27.

சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்க:

சீதை, இடத்திற்கு, அனுமன், இருந்த, சென்றான், இரகசியமாக

27. விடை:

அனுமன் சீதை இருந்த இடத்திற்கு இரகசியமாக சென்றான்.

சீதை இருந்த இடத்திற்கு அனுமன் இரகசியமாக சென்றான்.

28.

100வது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படுவது என்ன விழா?

28. விடை:

நூற்றாண்டு விழா

29.

எதிர்க்கருத்துத் தருக.

**மரியாதை**

29. விடை:

அவமரியாதை

30.

குறளை முடிக்கவும்.

தீயினால் சுட்ட புண் உள்ளாறும்
ஆறாதே ______________ ______________ ______________

30. விடை:

நாவினால் சுட்ட வடு

மூன்றாம் சுற்று நிறைவுபெற்றது

# இறுதிப்போட்டி

## 15 கேள்விகள்

1.

75வது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா எது?

1. விடை:

பவளவிழா

2.

காலங்கள் மூன்று வகைப்படும். அதில் ஒன்று எதிர்காலம் மற்றய இரண்டையும் கூறுக.

2. விடை:

இறந்த காலம், நிகழ் காலம்

3. பின்வரும் சொல்லைப் பிரித்தெழுதுக:

**அங்குமிங்கும்**

3. விடை:

அங்கும் + இங்கும்

4.

பின்வருவனவற்றில் ஒன்று மற்றையவற்றை விட வேறுபடுகின்றது. அது எது?

நவீன, புராதன, பண்டைய, பழைய

4. விடை:

நவீன

5.

திருவள்ளுவர் சிலை இந்தியாவில் எங்கு அமைக்கப்பட்டுள்ளது?

5. விடை:

கன்னியாகுமரியில்

6.

சிலப்பதிகாரம் என்னும் நூலை இயற்றியவர் யார்?

6. விடை:

இளங்கோவடிகள்

7.

இளமையில் கல் என்று கூறியவர் யார்?

7. விடை:

ஔவையார்

8.

மெய் எழுத்து எத்தனை?

8. விடை:

**18**

9.

சேர்த்து கூறுக:

வகுப்பு + அறை

9. விடை:

வகுப்பறை

10.

**எழுதினான்** என்பதன் நிகழ்காலம் என்ன?

10 விடை:

எழுதுகிறான்

11.

**இன்னல்** என்பதற்கு ஒத்த சொல் தருக

11. விடை:

துன்பம், துயரம்

12.

பன்னிரண்டு மாதங்கள் கொண்ட காலம் எப்படி அழைக்கப்படும்?

12. விடை:

ஒரு வருடம்

ஒரு ஆண்டு

13.

எனது அப்பாவின் தங்கையின் கணவரை நான் எவ்வாறு அழைக்கலாம்?

13. விடை:

மாமா

14.

இவ் வாக்கியத்தில் உள்ள

எழுவாய், பயனிலை, செயற்படுபொருள் கூறுக:

பசு புல்லை மேய்ந்தது

| எழுவாய் | பயனிலை | செயற்படுபொருள் |
|---|---|---|
| | | |

14. விடை:

| எழுவாய் | பயனிலை | செயற்படுபொருள் |
|---|---|---|
| பசு | மேய்ந்தது | புல்லை<br>(புல்) |

15.

“ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே…” என்ற பாடலை எழுதியவர் யார்?

15. விடை:

நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

இறுதிப்போட்டி நிறைவுற்றது.

நன்றி

மேலதிக வினாக்கள் தேவைப்பட்டால்.........

1.

வில்வித்தையில் சிறந்தவன் யார்?

1. விடை:

அருச்சுனன்

2.

செய்திகளைக் கொண்டுவரும் ஊடகங்கள் இரண்டு கூறுக

2. விடை:

பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் என்பன.

3.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதில் **கேளிர்** என்றால்?

3. விடை:

**உறவினர்**

# 4. பிரித்துக் கூறுக

வெண்டாமரை

4. விடை:

வெண்மை + தாமரை

5.

செய்திகளை அறிவிப்பவர் அறிவிப்பாளர்.

செய்திகளை சேகரிப்பவர் யார்?

Year 8 - 2019

5. விடை:

நிருபர்